*News and Articles in Tamil and English Please send them to:*

**THE EDITOR,**

'The Morning Star,
Diocesan office,
Vaddukoddai.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News / 89

*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*

**Vol:- 153 Jaffna, Friday 06 November 1992 No: 07**

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription

**Island : Rs. 100/-**
***For Advertisements***

Apply to:
**THE MANAGER**
'The Morning Star,
Diocesan office,
Vaddukoddai

RECEIVED
Periodicals Division
Library

## CHRISTIAN HOME FESTIVAL

The Women's Fellowship of the Jaffna Diocese celebrated the Christian Home Festival in Manipay, on 24th of October 1992 at 3.00 p. m. It began with a service of praise with the theme "As a father has compassion on his children so the Lord has compassion on those who fear Him (Psalm103:13).

Dr. Mrs. D. J. Ambalavanar, the President of the Women's Fellowship led the service, the lessons were read by Mrs. A. Jeyaseelan and Mrs. C. Jeyaratnam. Mrs. A. Rajasingham gave the message based on the theme - text. Mrs. I Jeyakumaran led the prayer of confession while the Rev. Mrs. A. R. Thambiappa concluded the service with prayer and benediction.

The service was followed by an entertainment and refreshments in the Parish Hall. Special songs were rendered by the women of Vaddukoddai, Navaly, Sathiapuram and members of the Alaveddy Church. The Sandilipay Church staged a short play. The women of the Uduvil Church entertained the audience with their Villu Pattu. Finally the Green Hospital drama group staged the play "Puthu Pathai". It was very entertaining while bringing home to everyone present what a Christian home should be.

## Atchuvely Christian College Celebrates Its Centenary Year

Atchuvely Christian College which is now called Atchuvely Maha Vidyalayam celebrated 100th year of its establishment on Wednesday 21st October 1992. The Rev. D. S. Thiagarajah was one of those who spoke at this historic occasion. This institution was founded by the American Missionaries in 1892.

## C. S. I. Synod Executive Committee

The C. S. I. Synod Executive Committee met in Madras from the 19th to the 20th of October at the Inter Church Service Association's Headquarters. One of the important steps taken at this meeting was the election of a new Moderator to succeed the late Dr. Ryder Devapriam, who died early in September. The Most Rev. Vasanth P. Dandin, the Bishop of the North Karnataka Diocese was elected Moderator by an overwhelming majority of votes. This appointment by the Executive is subject to ratification by at least half the membership of the General Synod of the C. S. I. This ratification is obtained by postal votes.

It was noted that this was the last meeting of the Executive of the Synod to be attended by three Bishops who would be retiring in the coming few months. The Bishop in Jaffna, The Bishop in Madya Kerala and the Bishop in Karnataka Central. The Synod also agreed to make a contribution to the Bishop Sabapathy Kulandran Foundation set up by the Jaffna Diocese of the C. S. I. The Executive reviewed the Priority Grants Programmes and expressed satisfaction that the projects in the various Dioceses were serving the purposes for which the grants were made.

It was also noted that the new headquarters of the C.S I Synod is nearing completion and could be opened for use some time in February 1993.

## Vocational Training Centre Pandaterruppu

The second batch of trainees of the above Centre who were displaced recently and had continued their training at Vaddukoddai in the Chelliah Hostel of Jaffna College have just completed their 6 months training and had their exhibition and award ceremony on Friday the 9th October at 1-30 p. m. in the Howland Hall.

The Chief Guests were the Rev. Dr. Jebanesan and Dr. Mrs. C. Ambalavanar, President of the Women's Fellowship of the J. D, C. S. I. Dr. Jebanesan spoke in praise of the work done by the trainees specially as they have been displaced from their village and their homes and some of them are now in camps. He also presented the certificates. Dr. Mrs. Ambalavanar spoke about how the Women's Fellowship was challenged to start a project for young women and how the first Vocational Training Centre was started and continues in Manipay and now there are several in different places. The Rev. Mrs. Thambyappa who is in charge of this V. T. C, also spoke. Dr. Mrs. Ambalavanar later declared open the exhibition. Lot of work had been done in sewing, cake making, coir making, broomsticks, rugs, etc., palmyra products like basket weaving, mat weaving, etc. The exhibition was open again for public on Saturday morning. Miss Ajantha Kulasegaram the Chief Instructor at this V. T. C. was responsible for organising the exhibition.

## WAR TO BE OVER BY DECEMBER END? PRIME MINISTER'S ORDER TO THE SECURITY FORCES

Mr. Dingri Banda Wijetunge, Prime Minister, Minister of Finance and the Minister of State for Defence on his recent visit to Vavuniya is said to have issued an order to the Security Forces that the war should concluded before December this year. The reason he gave for this was that the government is spending Rs. 270,000,000/- a day on the execution of this war. Since the government cannot continue to meet this expense, he has urged that the war should be finished within the next two months. One would have thought the Prime Minister could have thought of better reasons why this war should be brought to a stop. At least if financial consideration are all that matter, the people in this country would still welcome an end to this cruel and meaningless war.

## 91 Tamils Missing in The Eastern Province

The Sri Lankan Troops are said to have entered the village of Kaakkatchi in the Batticaloa District on the 19th of October and taken into custody 91 Tamil civilians in the area. When concern was expressed through I. C. R. C., it has been reported that 46 of them are held in custody in the Army Camp, but that the whereabouts of the other 45 are not known.

## UDUVIL GIRLS' COLLGE

The Principal and Staff of Uduvil Girls' College are to be congratulated for the colourful Kindergarten programme they had on the 24th of October. The College Hall was packed with a large audience of parents, friends and well wishers and photographers!

There were seventeen items and we were told that about 600 children of the Kindergarten participated. The dances, rythmics by boys of Year II and III, orchestra in heaven, a novel rendering of பாட்டி கட்ட வடை and Thennali Raman were among the best. Year I children's rendering of கொக்க ரக்கோ was not only colourful and lively but woke up those in the audience who had gone to sleep between items. Many boys took part and they will one day be among the galaxy of old boys of Uduvil Girls' College.

It is not easy to train small children to perform on a stage specially when every child is given a part. As Mrs. Mahendrakumar in her speech said, the teachers had to sort out some difficulties even as the children went on stage. However, the teachers and the children did themselves proud.

## 'Dalit' Christians' struggle taken to Indian Parliament in key bills

NEW DELHI (UCAN) — Church groups took another step toward social justice for 'dalit' (low caste) Christians by gaining support from national government leaders and in the house of parliament.

Catholic Church circles view as a positive sign the support given to the issue by a federal minister.

Also Catholic member of parliament (MP) has introduced a bill to amend the Indian Constitution to include dalit Christians for statutory privileges, that would give them such things as job reservations and free education.

Hindu, Sikh and Buddhist low caste dalits already have statutory privileges, but Christians have always been denied them on the grounds that Christianity has no caste.

Dalit literally means "trampled upon" and is used to designate former untouchables.

"The dalit Christian issue has become very much alive," says Father George Pereira, the newly appointed acting deputy secretary general of the Catholic Bishops' Conference of India (CBCI).

CBCI officials led by conference president Archbishop Alphonsus Mathias of Bangalore apprised Prime Minister P. V. Narasimha Rao of discrimination against dalit Christians.

They told Rao, Christians suffer "injustice and double disabilities" because of 'religious beliefs," and asked his help to rectify the discrimination.

Father Pereira told UCA News that the prime minister promised the bishops he would look into the matter.

He said Sitaram Kesari, federal welfare minister, visited the CBCI office in New Delhi to express "solidarity and concern with the cause of dalit Christians."

The CBCI standing committee met several members of parliament April 5-7 to seek help in amending the constitution

( Continued on Page 4 )

# உதயதாரகை

Estd. 1841

மலர் 153 06 - 11 - 1992 இதழ் 07


## திருச்சபையின் ஒன்றிப்பு சாத்தியமா ?

''அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாய் இருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்''.

— பரி. யோவான் 17:21

இயேசுக் கிறிஸ்து தமது சீசர்களுக்கு ஊடாகத் தாபித்த திருச்சபையானது ஆதியிலே ஐக்கிய ஒருமைப்பாட்டிலே உறுதியாகத் தரித்து இருந்தது. (அப் 2:42) திருச்சபையின் வளர்ச்சியிலே விசுவாசத்தில் ஏற்பட்ட திரிபுக் கொள்கைகளினால் இந்த ஒருமைப்பாட்டை திருச்சபையில் காணக் கூடாமற் போயிற்று. திருச்சபையின் விசுவாசத்துக்கும் வாழ்வுக்கும் பாதகமான செயல்பாடுகளை சீரமைக்கும் நோக்கோடு வளர்ந்து வந்த சிந்தனைகளும் முயற்சிகளும் 16ம் நூற்றாண்டில் மார்ட்டின் லூதரின் தலைமையில் பெரிய மாற்றத்தை சபைக்குள் கொண்டு வந்தது. இதன் விளைவு கத்தோலிக்க சபை பிளவுபட்டு புரட்டஸ்தாந்து சபை உருவானது. திருமறையைக் கையாளுவதிலும் விளக்குவதிலும் சுதந்திரம் ஏற்பட்டபடியினால் தொடர்ந்தும் புரட்டஸ்தாந்து சபைக்குள்ளே வெவ்வேறு பெயர்களுடன் சபைகள் உதயம் பெற்றன.

இந்த பிளவுகளின் மத்தியிலே திருச்சபை ஊழியக்காரர்கள மத்தியில் ஒரு ஒருமைப்பாட்டின் புரிந்துணர்வை ஏற்படுத்தும் நல்நோக்குடன பப்டிஸ்ட் மிசன் சங்க (Baptist Missionary Society) மிசனறியான வில்லியம் கேரி என்பவர் 1810ம் ஆண்டு ''மிசனரிமார் எல்லாரும் பத்து வருடத்துக்கு ஒரு முறை கூட வேண்டும்'' என்ற ஒரு வேண்டுகோளை விடுத்தார். இவர் 1810ம் ஆண்டு கண்ட இந்தக் கனவு 100 வருடங்களின்பின் 1910ம் வருடம் எடின்பரோ (ஸ்கொட்லாந்து) நகரில் நடந்த ''உலக மிசனரி மாநாட்டிலே நிறைவேறியது. அங்கு 159 நாடுகளைச் சேர்ந்த வெவ்வேறு சங்கங்களைக் கொண்ட 1200 மிசனரிமார் ஒன்றுகூடி திருச்சபையின் ஒருமைப்பாடு சீர்குலையாது ''ஒரே நற்செய்தியை'' எப்படி அறிவிப்பது என ஆலோசித்தனர். 10 நாட்கள் நடந்த இம் மாநாட்டிலே மிசனரி சங்கங்களிடையே இருந்த தவறான புரிந்து கொள்ளுதல்கள், சந்தேகங்கள் தீர்க்கப்பட்டு அன்பையும் ஐக்கியத்தையும் அனுபவித்ததின் ஊடாக ஒருமைப்பாட்டினை ஏற்படுத்தும் நோக்கோடு 3 பெரிய அமைப்புக்கள் உருவாகின.

1. ''சர்வதேச மிசனரி சங்கம்'' (International Missionary Council)
2. ''வாழ்வும் பணியும்'' (Life and Work)
3. ''விசுவாசமும் அமைப்பும்'' (Faith and Order)

இந்த அமைப்புக்கள் காலத்துக்கு காலம் மாநாடுகளைக் கூட்டி பல நாடுகளில் இருந்த சபைத் தலைவர்களை ஐக்கியத்தில் வழிநடத்தி, அதனூடாக திருச்சபை ஒருமைப்பாட்டைக் கொண்டுவரப் பாடுபட்டனர். இந்த மாநாடுகளின் விளைவாக 1948ம் ஆண்டு ''ஆம்ஸ்டடாம்'' நகரில் ''வாழ்வும் பணியும்'', ''விசுவாசமும் அமைப்பும்'' என்றும் இரு அமைப்புக்களும் ஒன்று சேர்ந்து ''அகில உலக திருச்சபைகள் மாமன்றத்தை (World Council of Churches) உருவாக்கின. உருவான இந்த ''அகில உலக திருச்சபைகள் மாமன்றத்தோடு'' ''சர்வதேச சங்கம்'' என்ற அமைப்பும் 1961ம் ஆண்டு ஒன்று சேர்ந்தது. இம்மாமன்றம் இன்று வரை அகில உலக திருச்சபைகளின் ஒருமைப்பாட்டுக்காகவும், சமூகத்தின் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்காகவும் அயராது உழைத்து வருகின்றது.

இது இப்படி இருக்க இந்தியாவிலேயும் 1862ம் ஆண்டு தொடக்கம் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை சபை ஐக்கியம் பற்றிய மாநாடுகள் நடத்தப்பட்டன. இந்த மாநாடுகளின் பலனாக 1919ம் ஆண்டு தென்னிந்தியாவில் சபை ஐக்கியத்துக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின. இந்த ஐக்கிய முயற்சிகளின் விளைவாக 1947ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27ம் திகதி அங்கிலிக்கன் சபை, மெதடிஸ்த சபை, மூப்பராளுகையுள்ள சபை, சபையாளுகை முறையுள்ள சபைகள் இணைந்து தென்னிந்திய திருச்சபை (C. S. I.) உருவானது. இதனைத் தொடர்ந்து வட இந்தியாவில் 1929ம் ஆண்டு ஐக்கிய பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்து 1970ம் ஆண்டு வட இந்திய திருச்சபை நிறுவப்பட்டது. இந்த சபையிலே அங்கிலிக்கன் சபை, மெதடிஸ்த சபை, மூப்பராளுகை சபை, சபையாளுகையுள்ள சபைகள், பப்டிஸ்ட் சபை, கிறிஸ்துவின் சீடர் சபை, சகோதர சபை என்பன சேர்ந்து ஒரு விசாலமான ஐக்கியத்தை உருவாக்கினர். கீழைத்தேச சபை ஒருமைப்பாட்டில் இந்த இரு நிகழ்ச்சிகளும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

இதே போல் இலங்கையில் 1972ம் ஆண்டு அங்கிலிக்கன் சபை, மெதடிஸ்த சபை, தென்னிந்திய சபை ஆகிய மூன்றும் ஒன்று சேர்ந்து ''இலங்கை சபை'' என்னும் ஒரே சபையாக உருவாக எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியிலே முடிந்தது. இன்று வரை சபைகளின் மத்தியிலே ஒருமைப்பாட்டின் சிந்தனைகள் இருந்த பொழுதும் ஐக்கியம் கைகூடவில்லை.

இவ்வேளையிலே திருச்சபை ஒன்றிப்புக்கான தடைகளைக் குறித்து ஆராய்வது அவசியம்.

1. கத்தோலிக்க சபையும், புரட்டஸ்தாந்து சபையும் இணைய தடையாக உள்ளவை சில.

a) குரு அபிஷேகம் பற்றிய பிரச்சனைகள்

b சாக்கிரமெந்துகளை கடைப்பிடிக்கும் பிரச்சனைகள்

c) குருமார்களின் திருமணம் பற்றிய பிரச்சனை

d) பெண்கள் அருட்பொழிவு பற்றிய பிரச்சனை

e) புனிதர்களின் வழிபாடு பற்றிய பிரச்சனை

2 புரட்டஸ்தாந்து சபைகள் இணைவதற்கான பிரச்சனைகள் சில:-

a) நற்செய்தி அறிவிப்பது மட்டுமா, சமூக ஈடுபாடு, அரசியல் ஈடுபாடு தேவையா என்பது பற்றிய பிரச்சனை

b) திரித்துவம், பரிசுத்த ஆவி, ஞானஸ்நானம் பற்றிய பிரச்சனை

c) திருமறை, இறையியல் பற்றிய பிரச்சனை

இன்று வரை புரிந்துணர்வுகள், ஒருமைப்பாட்டு சிந்தனைகள், முயற்சிகள் இருந்தாலும் கத்தோலிக்க சபைக்கும் புரட்டஸ்தாந்து சபைக்கும் இடையே ஐக்கியம் ஏற்படவில்லை. புரட்டஸ்தாந்து சபைகள் மேலும் பிளவுபட்டுக் கொண்டே செல்கின்றன யோவான் 17:21இல் இயேசு செய்த ஜெபத்தின்படி பரிசுத்த ஆவியரின் செயல்பாட்டினால் சபை அனைத்தும் ஒரே பொதுவான ஐக்கிய சபையாக உருவாகும் என்பது எமது விசுவாசமாகும்.

(A S T. ஆனந்தன் & G. மைனசீலன்)

---

## ஸ்ரீலங்கா கிறிஸ்தவ சம்மேளனம்

அன்பின் கிறிஸ்தவ நண்பா,

கிறிஸ்தவ தலைவர்களின் சம்மேளனம் கூடி ஒரு வருட காலமாகின்றது. இந்த கிறிஸ்தவ தலைவர்களின் கூட்டத்தினூடாகவே சிறீலங்கா கிறிஸ்தவ சம்மேளனம் பிறந்தது.

எமது நாட்டில் கிறிஸ்தவ சபைக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்புப் பற்றிய தகவல்களை ஆராயவும் ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கவும் இச்சம்மேளனம் தொடர்ந்து கூடிவருகிறது. எல்லாச் சபைப் பிரிவுகளையும் சேர்ந்த கிறிஸ்தவர்களும தொடர்ந்து இத்தேவைகளுக்காக ஜெபித்துள்ளனர். எல்லாச் சபைகளும் இணைந்த திரளான ஜெபக்கூட்டம் திறந்த வெளி அரங்கில் கூட்டப்பட்டது. பகைமை ஏற்படுத்தும் செய்தி பிரசுரிப்பவர்களை எமது பிரதிநிதிகள் சந்தித்தனர். இப்போது எமது கரிசனையை அரசாங்கத்திற்கும் தெரிவிக்க வழி பிறந்துள்ளது.

கௌரவ பிரதம மந்திரியினாலும், சிரேஷ்ட அரசாங்கஉத்தியோகத்தர்களாலும் நாம் நன்கு ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். எமது பரிதாப நிலையைக் குறித்து அவர்கள் அனுதாபத்துடன் செவிசாய்த்தனர். இக்கூட்டத்தின் செய்தி வெளியீட்டினை கிறிஸ்தவ சமூகத்திற்குத் தெரிவிப்பதற்காக இத்துடன் இணைத்துள்ளோம்.

எதிர்ப்புச் சம்பவங்கள் பற்றி எமக்கு அறிவிக்கப்படும் அறிக்கைகளை ஆராய்ந்து வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதே எமது நோக்கங்களில் ஒன்றாகும். எனவே பயமுறுத்தல்கள் அல்லது தாக்குதல்கள் ஏற்படும்போது உடனுக்குடன் விபரங்களை ஆதாரங்களுடன் எமக்குத் தெரியப்படுத்தும்படி நாம் கேட்டுக்கொள்கிறோம்.

மற்றைய மத அங்கத்தவர்களைச் சேர்ந்த உங்கள் நண்பர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஒரு செய்தித்தாளை நாம் தயார் செய்கின்றோம். இது கிறிஸ்தவ சாட்சிக்கான தப்பபிப்பிராயத்தை அகற்றித் தேவையற்ற கெடுபிடிகளைத் தவிர்க்கும். இது ஆங்கிலத்திலும் வேறுவேறாக உள்ளது. ஒரு பிரதி ரூபா 1/- இற்கு பெற்றுக் கொள்ளலாம். உங்களுக்குத் தேவையான பிரதிகள் எவ்வளவு என சம்மேளத்தின் காரியதரிசிக்குத் தெரியப்படுத்தவும்.

கிறிஸ்தவர்கள் எங்கு பணியாற்றினாலும், சுவிஷேசத்திற்காக நாங்கள் எதிர்நோக்கும் பரவலான எதிர்ப்புகளின் மத்தியில் ஜெபத்தின் மூலமாகவும் வேறு பயனுள்ள விதத்திலும் உதவி செய்ய சிறீலங்கா கிறிஸ்தவ சம்மேளனம் தன்னை அர்ப்பணித்துள்ளது என்ற உறுதியைக் கூறிவைக்க விரும்புகிறோம்.

---

## ஆதீனத்தின் வருடாந்த விழா

ஆதீனத்தின் வருடாந்தவிழா 26. 9. 92 அன்று கொண்டாடப்பட்டது. காலை 8.00 மணிக்கு திருவிருந்து ஆராதனையுடன் ஆரம்பமாகியது. இத் திருவிருந்து ஆராதனையை ஆதீனத்தின் அத்தியட்சகர் பேரருட்திரு. D. J. அம்பலவாணர் அவர்கள் நடாத்தினார் அத்தியட்சகர் அவர்களே அருளுரையையும் வழங்கினார். இவ்வாராதனையின் போது நான்கு ஊழியர்கள் உதவிக்குருக்களாக அபிஷேகம் பண்ணப்பட்டனர். அபிஷேகம் பண்ணப்படுவோரை அருட்திருவாளர்கள் D. S. தியாகராஜா, A. ஜெயக்குமாரன், V. N. தருமகுலசிங்கம் ஆகியோர் அத்தியட்சகரின் முன் வழிநடாத்தினர்

அருட்பொழிவு பெற்றவர்கள் :

1. பென்ஜமின் ஜெயராஜா : கோணாவில், சமாதானபுரம் ஊழியர்
2. துரைராஜசிங்கம் ஹென்ரி வசந்தகுமார் : சலோம்நகர் ஊழியர்
3. அன்ரனி சவரிமுத்து : விசுவமடு ஊழியர்
4. சொலமன் மில்றன்: இணுவில், தேவகிராமம் ஊழியர் உடுவில் உதவியாளன்:

தொடர்ந்து திருவிருந்து ஆராதனை நடைபெற்றது. அன்று 500 பேருக்கு மேல் திருவிருந்தில் பங்குபற்றினர்

ஆராதனையின் பின் அனைவருக்கும் தேநீர் விருந்து வழங்கப்பட்டது.

11 மணியளவில் உடுவில் மகளிர் கல்லூரி இசைக்குழுவினர் வாத்திய இசைக்கருவிகள் மூலம் மக்களை மகிழ்வித்தனர். தொடர்ந்து நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அத்தியட்சகர் அவர்கள் தலைமை தாங்கினார்கள். செல்வி C.V. செல்லையா அதிபர் உடுவில் மகளிர் கல்லூரி வைத்திய கலாநிதி T. W. ஜெயகுலராஜா தலைவர் யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஒன்றியம் ஆகியோர் திருச்சபையின் பணிகள் பற்றி உரை நிகழ்த்தினர்.

சுமார் 1.00 மணியளவில் மதிய ஐக்கிய போசனத்துடன் விழா இனிதே முடிவுக்கு வந்தது. போக்குவரத்து கஷ்டங்களின் மத்தியிலும் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

---

## மன்னார் ஆயர்

ரோமன் கத்தோலிக்க சபையின் மன்னார் மறை மாவட்டத்தின் ஆயராக பேரருட்திரு கலாநிதி ராயப்பு யோசேப்பு அவர்கள் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் நெடுந்தீவைச் சேர்ந்தவர் இவருக்கு எமது வாழ்த்துக்கள்.

## தாரகை ஒளி

" பேதைகளின் தவறுகள் அவர்களையே கொன்றுவிடும் ;
சிறுமதியோரின் நற்பெருமை அவர்களை அழித்துவிடும்."
— நீதிமொழிகள். 1:32

## எங்கள் கருத்து

### பரிசுத்தவான்களின் திருநாள்
### ( ALL SAINTS DAY )

கிறிஸ்தவ திருச்சபைப் பஞ்சாங்கத்தின்படி, நவம்பர் மாதம் 1ஆம் திகதி சகல பரிசுத்தவான்களின் திருநாளாகக் கணிக்கப்பட்டுள்ளது திருச்சபைத் திருத்தவாதிகள் ( சீர்திருத்தத் தலைவர்கள் ) இந்த நாளில் ஆழ்ந்த கிறிஸ்தவ பொருளில்லையென, பஞ்சாங்கத்திலிருந்து அகற்றிவிட்டனர். ஆயினும், இதில் பொதிந்துள்ள இறையியற் கருத்துக்களை ஆய்ந்தறிந்த திருச்சபைப் பிதாக்கள், இந்த நாளின் அனுசரிப்பை மீண்டும் பஞ்சாங்கத்திற்குள் கொண்டு வந்தனர். இன்று, உலகிலுள்ள அனைத்துச் சபைகளும் இந்நாளை சமயத் திருநாளாக அனுசரித்து வருகின்றன.

இத்திருநாள் அனுசரிப்பில் அனைத்துத் திருச்சபை ஒருமைப்பாட்டின் கோட்பாடு பொதிந்துள்ளது. இதனால், ' பரிசுத்தவான் ளின் ஐக்கியத்தில் ' நமக்குள்ள நம்பிக்கை உறுதிப்படுகிறது. இதனைச் சற்றுத் தெளிவாக அறிதல் அவசியம்.

' பரிசுத்தவான்கள் ' என்ற பதத்தின் உட்பொருள் என்ன. அவர்கள் எத்தகைய பாவமுமின்றி, மாசு கறையற்றவர்கள் என்பதல்ல. பவுலடியார் கொரிந்து சபைக்கு எழுதிய கடிதத்தில், அச்சபையாரைப் ' பரிசுத்தவான்கள் ' எனக் குறிப்பிடுகின்றார். இதற்குரியவாறு அவர்கள் வாழவில்லை என்பது அக்கடிதத்தில் காணப்படுகிறது. பரிசுத்தவான்களுக்குரிய தகுதி அவர்களுக்கிருக்கவில்லை.

ஆகவே, இச்சொல் - கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையின் உறுப்பினர்க்குப் பொதுவாக அளிக்கப்பட்ட பெயராகும். ஏனெனில் ' கடவுள் பரிசுத்தராயிருப்பதால், அவரின் மக்களும் பரிசுத்தராயிருக்க வேண்டுமென ' எதிர்பார்க்கப்படுகின்றனர் ( 1பேது. 1: 5 ) இதுவே இதன் உட்பொருள்.

இவ்வுலகிலுள்ள திருச்சபை சந்தேகமின்றி ஆன்மீக முறையில் ஒன்றித்திருக்கிறது. இதனை, " சபையின் அத்திவாரம் " என்ற ஞானப் பாடலின் இரண்டாம் சரணம் விளக்குவதைக் காண்க :

" எத் தேசத்தார் சேர்ந்தாலும்
சபை ஒன்றே ஒன்றாம் ;
ஒரே விசுவாசத்தாலும்
ஒரே இரட்சிப்புண்டாம் ;
ஒரே தெய்வீக நாமம்
சபையை இணைக்கும் ;
ஓர் திவ்விய ஞானாகாரம்
பக்தரைப் போஷிக்கும்."

இறையியல் அறிஞன் பீ. ரி. பொர்சித் ( P. T. Forsyth ) என்பவர் – ' திருச்சபை, பூமியின் அடியில் பரந்திருக்கும் பாறைபோன்று பரந்துளது. ஆயினும், அங்குமிங்கும், அப்பாறை பூமியின் மேற்பகுதியில் உயர்ந்து காணப்படுகிறது. இதனை முதலில் மேலோட்டமாகக் காண்போர்க்கு இக்கற்பாறைகள் தனித்தனியாக நிற்பதுபோல் காணப்படும் - ஆனால், அதனைக் கூர்ந்து கவனிப்போர்தான், அவற்றின் அடிப்படையில், அனைத்தும் பரந்துள்ள பாறையினால் ஒன்றித்திருப்பதைக் காண்பர்.

இதைப் போன்று உள்ளூர்ச் சபைகள் தனித்தனியாய் திகழ்வது போல் காணப்படினும் - அவை அனைத்தும் ஆன்மீக வழியில் ஆவியில் ஒன்றாக இணைந்துள்ளன. இந்த உண்மையையே ' பரிசுத்தவான்களின் திருநாள் ' பண்டிகை நமக்கு நினைவூட்டுகிறது

இவ்வுலகிலுள்ள சபைகள் அனைத்தும் இத்தகைய ஒன்றிப்பில் மகிழ்ந்திருக்க வேண்டுமெனச் சுட்டிக்காட்டுகிறது.

அடுத்ததாக-திருச்சபை இவ்வுலக கால இட எல்லைக்குள் மட்டும் அடங்கியுள்ளதென நாம் கருதப்படாது. சாவின் வழியாக, மறுமைக்குள் வாழும் அனைத்து விசுவாசிகளும் - அங்கு இயங்கும் திருச்சபையின் (வெற்றி பெற்ற சபை) மக்களாகத் திகழ்கின்றனர் என அறிக-

" மேலான வான காட்சி
கண்டாசீர் வாதத்தை
பெற்று, போர் ஓய்ந்து வெற்றி
சிறந்து - மாட்சிமை
அடையும் பரியந்தம்
இன்னா உழைப்பிலும்
நீங்கா சமாதானம்
மெய்ச் சபை வாஞ்சிக்கும்."

நாம் முன்னர் கவனித்த பாடலின் இச்சரணம், நாம் முன்னர் கூறிய கருத்தை விளக்குவதைக் காண்க. இதுவே, ' பரிசுத்தவான்களின் ஐக்கியத்தை முழுமையாக விளக்குகின்றது.

' மேகம் போன்ற திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்திருக்க ' ( எபி. 12:1 இவ்வையகத்தில் உள்ள போராடும் சபை, விண்ணகத்தில் உள்ள வெற்றி பெற்ற சபையினால் நிறைவாக்கப்படுகிறது. இது, திருச்சபையின் நித்திய தன்மையை விண்ணிலும் மண்ணிலுமுள்ள இறைவனின் பரிசுத்தவான்களுக்கிடையில் உள்ள ஒன்றிப்பை இத்திருநாள், நினைவூட்டுகிறது.

திருச்சபை - காலம் இடத்தால் சட்டுப்படாதது. எங்கள் இறை வழிபாட்டில், நாம் தேவதூதரோடு சேர்ந்து வழிபடுகின்றோம். ஆகவே, பரிசுத்தவான்களின் ஐக்கியத்தை நாம் அலட்சியம் செய்தால், அது நமது விசுவாசத்திற்கே கேடாய் அமையும் என அறிக.

ஆகவே - பரிசுத்தவான்களின் திருநாள், இந்நாட்களில் கிறிஸ்துவின் திருவுடலாகிய திருச்சபையின் உறுப்பினர் அனைவரும், ஆவியில் ஒன்றித்திருக்க வேண்டுமென்றும், நம்மைவிட்டு, சாவின் வழியாக விண்ணகத்திற்கேகிய நமது அன்பர்களுடனும் நமக்கு ஒன்றிப்புளதென்பதையும் அறிந்து - தொடர்ந்து கிறிஸ்து நமக்களித்த பணியை மேலான திவ்விய எதிர்பார்ப்போடு ஆற்ற வேண்டியது நமது கடமை.

## செய்திகள்:

**மதமும் கலவரமும்**

சென்னையின் ஒரு பகுதியில் நபிகள் நாயகம் பிறந்த நாள் விழா ஊர்வலம் நடந்தபோது, வன்முறைக் கலவரங்கள் வெடித்தன. இரண்டு மனித உயிர்கள் பலியாகின. தொடர்ந்து மூன்று நாட்கள் சமூக விரோதிகளின் பிடியில் சிக்கி அந்தப் பகுதி அட்டூழியங்களில் மூழ்கியது.

**தமிழ் நாடு இறையியல் கல்லூரி உப-அதிபரின் வருகை**

மதுரையிலுள்ள தமிழ் நாடு இறையியல் கல்லூரி உப-அதிபர், அறிவர் துயஸ்சன் கார் அவர்களும், பிலிமத்தலாவை ஸ்ரீலங்கா இறையியல் கல்லூரி பேராசிரியர் எபெநேசர் ஜோசப் அவர்களும், சுன்னாகம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியைச் சந்தித்தனர்.

**முஸ்லிம்களின் புனிதப்போர்**

இலங்கை வாழ் முஸ்லிம்கள், இங்கு புனிதப்போர் ஆரம்பிக்கும் நிலையில் உள்ளனர் என - நாட்டிலுள்ள இஸ்லாமிய மதகுருமார் அங்கம் வகிக்கும் உயர் அமைப்புக் கூறியுள்ளதென - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச். எம். அஷ்ரப் தெரிவித்துள்ளாரெனத் தெரிகிறது.

**கிடைக்கப் பெற்றோம்**

தொடர்பு: "கிறிஸ்தவ தொடர்பகம்" - இரு மாதத்திற்கு ஒரு முறை வெளிவரும் "தொடர்பு" என்ற சஞ்சிகையை கிடைக்கப் பெற்றோம். அருள் திரு. ஆர். துரைராஜா அவர்களின் தலைமையில் இயங்கும் - கிறிஸ்தவ தொடர்பகம் - முன்னர் சில ஆண்டுகளாக உடுவிலில் இயங்கிற்று. இச்சஞ்சிகையின் ஆசிரியர் திரு தேவதாசன் ஜெபசிங்கம் - இவ்விதழை மிகச் சிறப்பாக வெளியிட்டுவருவதைக் கண்டு பெரு மகிழ்ச்சியடைந்தோம். அருள் திரு. ஆர் துரைராசா அவர்களின் பணி மென்மேலும் சிறப்பாக வளரவேண்டுமென வாழ்த்துகிறோம்.

"மன்றாடல்" - இல்லந்தோறும்! நற்செய்தி நிறுவனம், கடந்த சில ஆண்டுகளாக மாத இதழாக வெளியிட்டு வரும் - ' மன்றாடல்" என்ற தமிழ் சஞ்சிகை - அக்டோபர் மாதத்தில் புதிய அமைப்பில் வெளிவந்துள்ளது. தமிழ் கிறிஸ்தவர்கள் விரும்பிப் படிக்கத்தக்க முறையில், அழகாக வெளியிடப்பட்டுள்ளது இந்த நிறுவனம் வெளியிடும் ஆங்கில இதழ் - Direction - என்பது சமீபத்திலிருந்து புதிய அமைப்புப் பெற்றுள்ளது. "மன்றாடல்" சஞ்சிகையின் ஆசிரியர் திரு. சி. பீ. சத்தியநாதன் - இலங்கை இல்லந்தோறும் நற்செய்தி நிறுவனத்தின் இயக்குநர் திரு. சி எஸ். தேவபாலசிங்கம் அவர்கள் இத்துறையில் ஆற்றி வரும் சிறந்த பணிக்காக, அன்னாரை மனமார வாழ்த்துகிறோம்.

### கிறிஸ்தவ இல்லற விழா

தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனத்தின் பெண்கள் ஐக்கியத்தினரின் கிறீஸ்தவ இல்லற விழா அக்டோபர் 24-ம் திகதி பிற்பகல் 3 மணியளவில் மானிப்பாயில் நடைபெற்றது. தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குவது போன்று கர்த்தர் தமக்குப் பயந்தவர்கள் மேல் இரங்குகிறார். (சங் 102 : - 103) என்ற மகுட வாக்கியத்தின் அடிப்படையில் ஆராதனையுடன் விழா ஆரம்பமானது.

வைத்திய கலாநிதி திருமதி D. J. அம்பலவாணர் பெண்கள் ஐக்கியத்தின் தலைவர் ஆராதனைக்கு தலைமை தாங்கினார். திருமதி A. ஜெயசிலன், திருமதி C. ஜெபரட்ணம் ஆகியோர் வேதப் பாடத்தை வாசித்தனர். திருமதி A. இராஜசிங்கம் செய்தியை மகுட வாக்கியத்தின அடிப்படையில் வழங்கினார். திருமதி I. ஜெயகுமாரன் லித்தானிய ஜெபத்தில் வழி நடத்தினார். அருட் திருமதி A. R. தம்பியப்பாவின் ஜெபத்துடனும் ஆசீர்வாதத்துடனும் ஆராதனை முடிவுற்றது.

ஆராதனையைத் தொடர்ந்து, திருச்சபை மண்டபத்தில் தேநீர் விருந்தும் கலை நிகழ்ச்சியும் இடம் பெற்றன வட்டுக்கோட்டை, நவாலி, சத்தியபுரம் ஆகிய திருச்சபைப் பெண்களும், அளவெட்டி திருச்சபை அங்கத்தவரும் விசேட பாடல்களைப் பாடினார்கள். உடுவில் திருச்சபைப் பெண்கள் வில்லுப்பாட்டின் மூலம் சபையோரை மகிழ்வித்தனர். சண்டிலிப்பாய் திருச்சபையினர் ஒரு சிறிய நாடகத்தை அரங்கேற்றினர். இறுதியாக கிறீன் வைத்தியசாலை நாடகக் குழுவினர் "புதுப் பாதை" என்ற நாடகத்தின் மூலம் கிறீஸ்தவ குடும்பம் எவ்வாறு இருக்க வேண்டுமென எடுத்துக்காட்டி மக்களை மகிழ்வித்தனர்.

### அச்சுவேலி
### கிறிஸ்தவ கல்லூரியின் 100-வது ஆண்டு விழா

அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி தமது 100-வது ஆண்டு நிறைவு விழாவை புதன்கிழமை, 21 அக்ரோபர் 1992 அன்று கொண்டாடியது. தென்னிந்திய திருச்சபையின் அருள் திரு D S தியாகராஜா இவ்வைபவத்தில் கலந்து தமது உரையை ஆற்றினார். தற்பொழுது அச்சுவேலி மகா வித்தியாலயம் என அழைக்கப்படும் இந் நிறுவனம் அமெரிக்கன் மிஷனரிமாராரால் 1892-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

### இறையியல் கல்லூரியில் முதல்வர்

**பதவியில் அமர்த்தும் வழிபாடு**

சுன்னாகம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் புதிய முதல்வராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் அருள் திரு. டீ. எஸ். தியாகராஜா அவர்களை பதவியில் அமர்த்தும் வழிபாடு உடுவில் தென்னிந்தியத் திருச்சபை தேவாலயத்தில் 27 - 09 - 92 பிற்பகல் 3-00 மணிக்கு நடந்தது. உடுவில் திருச்சபையில் குருவாக இருக்கும் இவர், உயர்தர இறையியல் பட்டம் பெற்றவர். இறையியல் ஆர்வம் உடையவர்.

இவ்வழிபாடு பேராயர் டீ. ஜே. அம்பலவாணர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் கலாநிதி அருள் திரு. எஸ். ஜெபநேசன் அவர்கள் அருளுரை ஆற்றினார் நன்றிதோய்ந்த துதிமாலை அருள் திரு. டீ. ஆர். அம்பலவாணர் அவர்களால் ஏறெடுக்கப்பட்டது. கல்லூரி மாணவர்கள் விசேட பாடல் பாடி, தங்கள் மகிழ்வினை வெளிப்படுத்தினார்கள். பின்னர் பேராயர் அவர்களால் வேதாகமம் வழங்கப்பட்டு செபத்துடன் பதவியில் அமர்த்தப்பட்டார். இந்த ஆராதனையின் ஆரம்பத்தில் கல்லூரி மாணவர்கள், விரிவுரையாளர்கள் சிருடை அணிந்து பவனியாக ஆலயத்துக்குள் பிரவேசித்தது கண்ணுக்கு விருந்தளித்தது. புதிய முதல்வர், பலரால் மலர் மாலைகள் மூலம் கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து நான்கு ஆண்டுகளுக்கு முதல்வராக இவர் இருப்பார் என அறிகிறோம்.

## EDITORIAL

### A PASSAGE TO COLOMBO

In recent times the need for a safe and secure route to Jaffna has been emphasised in the seminars on the ethnic conflict. The National Christian Council, in a statement in July this year, urged the government to examine ways and means of providing a safe route to the Peninsula.

After the outbreak of civil war in June 1990 the people avoided the Elephant Pass army camp and used the Pooneri cause-way. When Pooneri was taken over by the army in October 1991, the people were forced to go through Kombady and Oorian. In June 1992 even this route was closed as the army moved into this area. Reaching Kilinochchi via Oorian and Kombady was a Hercu'ian task but the people did not grumble because it was secure. The army allowed the passengers to take that path.

But after the closing of this exit, the Kilali - Aalankerni route was opened. Travelling on this route was a very vulnerable and risky exercise. The passengers are taken in small fishing boats across the Jaffna lagoon. The journey normally takes about three hours at dead of night. They reach the point Aalankerny on the mainland and travel in tractors and bullock carts for one hour and reach the bus-stand. The buses take the passengers to Thandikulam and the next morning they go to the army check point and proceed to Vavuniya Railway Station.

The mode of travelling is very painful, but the people have no alternative. Colombo is the metropolis of an over-centralized executive system. There had been much discussion on devolution and decentralization, but Colombo remains the helm of all affairs. It had been said that the Palmyra Development Board was the only corporation that had it's headquarters in Jaffna. Patients have to go to Colombo for medical treatment. To go to foreign countries people have to go through Katunayake Airport. In the North, the communication system has completely broken down and many old people go to the capital city to talk to their children living in distant lands. It is estimated that about two thousand people go through Kilali and Aalankerny every day.

Two months ago the Government announced that the Kilali-Aalankerny route had been closed. At the beginning of this month the army went into direct action. It shot down passengers who were crossing the Jaffna lagoon in fishing boats. So far about thirty people have been killed and an equal number of vessels have been sunk. The Government insists that people should go through Elephant Pass. The militants argue that the Government has other motives in opening Elephant Pass for the public. The unfortunate people continue to travel by the precarious and perilous Kilali - Aalankerny route. Few people in South Sri Lanka seem to be aware of the agony of the innocent people trying to go to the capital city. Humanitarian Organisations and religious dignitaries in the South must know that a safe passage to Colombo and back is of prime importance and an urgent need.

### "COME HOME"

In the ancient days missionaries from the West sailed the Seven Seas taking several months to reach our shores, to bring us Christianity and education, and in addition doctors, architects and engineers to build up our land.

In recent times most of our countrymen who qualified as eminent professionals and pastors took wings to foreign lands. Quite a number of them studied in mission schools and on mission scholarships. Most of them said they were going out, because of their children who had to be educated. Now most of their children are not only educated but married and well settled in life.

Our land has quite a number of children who have to be educated. Hospitals are facing an acute shortage of qualified doctors (churches and mission hospitals of Manipay, Inuvil. Puttur in particular). Schools are so short of qualified teachers, that retired teachers and officers are being recruited to educate our children. Jaffna campus too is short of staff in all disciplines including the medical faculty.

The fact remains that in spite of all the hardships there are still quite a number of Tamils living in our land of birth where villages and towns laid waste have to be rebuilt.

Most of them who are abroad are now citizens of foreign lands. We would welcome them to come and serve at least short terms of two to three years in their motherland. We will not be able to pay them the equivalent of their foreign salaries but we feel they will be satisfied with the lower salaries paid, considering this more as a service to the motherland.

This humble request is being made now, so that those who are abroad could some thought and make preparations by the time our land is free of the bombs, shells and gunfire they could come and serve our land where quite a few of your brothers and sisters are continuing to live.

J. S. S.

### Memorial Service - Sydney, Australia

A service of remembrance and thanksgiving for the life of the late Mrs. Maheswary Mather was held at the Uniting Church of Australia, Carrington Avenue, Sydney, Australia, on the 12th of July at 5.00 p. m. The service was lead by her eldest son, Bobby Mather of Toronto, Canada.

The lessons were read by Miss. Dushyanti Anantakrishnan (grand daughter) and Mrs Vinitha Rohan Rajaratnam. Special song by Mrs Priya Niles (youngest daughter) recorded on a tape was played at the service. Tributes were paid by Mrs. Annaratnam (Annam) Sivasubramaniam (cousin) and The Rev. Bill Clarke (Minister, Uniting Church of Australia). Mrs. Sivasubramaniam said about the seven children of the late notary Sabapathypillai and that Mahes is the oldest of the grand children. She further said that Mahes studied and later taught at Chundikuli Girl's College and at Manipay Memorial English School; she was dedicated to her profession because of her faith in God; and that all her cousins loved her, as much as they loved their parents. She has been a widow for 36 years.

Rev. Bill Clarke in his tribute said of his close acquaintance with Mrs. Mahes Mather when she first took ill in Darwin (Northern Territory) and was at Royal Darwin Hospital. He recalled how he had been called many times, day and night, by Wilma and her husband Anantakrishnan to say that she is dying and to pray with her. He said that he prayed to God to bring about a miracle in her life and that God did it. She lived five years after.

Bobby Mather preached the sermon. At the end of the service, Bobby thanked all present, and requested members to join in the fellowship coffee hour in the church hall. The service was attended by nearly 200 people.

Mrs. Mahes Mather left behind her children Bobby Canada), Sumitra / Wilma (Australia), Indran (Madras), Rajan (France), Priya (Canada), and in - laws Lalla. Anantakrishnan, Shanthana, Babu, and Elmo, and grand children Nishanth, Rakshy, Debbie, Dushyanti, Sajeetharan, Luxman, Mahen, Shiran, Willie and Florence, and sisters Dr. Kamy and Mrs Ranji to mourn her loss. May the good lord grant them his peace.

### Dalit Christians............

( Continued From Page 1 )

On February 28, George Fernandes, a former federal minister, introduced a private member's bill in the "Lok Sabha" (lower house of parliament) for the constitutional amendment to help dalit Christians.

The dalit Christian issue can be settled only through a constitutional amendment, and several Church groups are lobbying parliamentarians to support the issue in the house.

The bill notes that dalit Christians suffer the same discrimination as dalit Buddhists, who were included in the last amendment in May 1990. It says the change of religion does not alter social and economic status.

Fernandes, a Catholic opposition MP, is seeking special quotas for Christians in government services and seats in parliament and state legislative assemblies.

The bill notes that the inclusion of Christians will incur only 20 million rupees (nearly USDollars (701,000) in annual expenses to the Government.

Catholic MP Peter Marbaniang of the ruling Congress Party supports the draft amendment and said he will vote for Fernandes' bill. He regretted the government's failure to take up the issue as a government move.

Since the speaker takes up private members' bills on turn, Fernandes' bill is expected to come up for discussion in the budget session now underway or during an upcoming session of parliament.

**CRADLED IN A MANGER**

A Christmas Carol Service

JAFFNA COLLEGE

5.00 p. m.

Sunday 22 November, 1992

Cathedral Church, Vaddukoddai.

ALL ARE CORDIALLY INVITED.

Jaffna College
Vaddukoddai

PRINCIPAL

Registered as a News Paper at the P O. Sri Lanka under No. Q/J/140/89 News Printed for the Jaffna Diocese of the Church of South India at The American Ceylon Mission Press, 182. 1st Cross Street. Jaffna on Friday the 6th of November 1992 and published by The Rev. G. D. ANANDARAJAN 182 First Cross Street Jaffna.